குறிப்பீடு/ 2019/06

LOLC FINANCE
(An LOLC Group Company)

எல்.ஓ.எல்.ஸீ பினான்ஸ் பீ.எல்.சீ இன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு உற்பத்திகள் தொடர்பான **நியதிகள் மற்றும் நிபந்தனைகள்** இவ்வாவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எந்நேரத்திலும் குறிப்பிடப்பட்ட ஏதாவது குறிப்பீட்டு நியதிகள், நிபந்தனைகள் மற்றும் உரிய கட்டணம் மற்றும் கட்டணங்கள் என்பவற்றை திருத்துவதற்கும், நீக்குவதற்கும் அவற்றுடன் சேர்ப்பதற்கான உரிமை கம்பனிக்கு உரித்தாகும். இற்றைப்படுத்தப்பட்ட குறிப்பீட்டு நியதிகள் மற்றும் நிபந்தனைகளை *www.lolcfinance.com* என்ற எமது இணைய தளத்தில் பார்க்கவும்.

## பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

எனது/ எமது வேண்டுகோளுக்கிணங்க நான்/ நாம் மேலே பதிவுசெய்துள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை எல்.ஓ.எல்.ஸீ பினான்ஸ் பீ.எல்.ஸீ (எல்.ஓ.எப்.ஸீ) எனக்கு/ எமக்கு கிடைக்க செய்யும் என்பதைக் கருத்திற்கொண்டு நான்/ நாம் கீழுள்ள நியதிகள், நிபந்தனைகள் மற்றும் நட்டோத்தரவாதங்களுக்கு கட்டுப்பட உடன்படுகின்றேன்/ உடன்படுகிறோம்.

### அ) பொது நியதிகள்

1. இங்கு குறிப்பிட்ட சேவைகள் தனிப்பட்ட பாவனைக்கு மாத்திரமென்பதுடன், இங்கு குறிப்பிட்ட சேவைகளினூடாக நிகழந்த அல்லது செல்லுபடியான அனைத்து பரிமாற்றல்களுக்கான முழுமையான பொறுப்பினை ஏற்றுக்கொள்வதுடன், வழங்கப்பட்ட சேவையுடன்/ சேவைகளுடன் தொடர்பானதாகவோ அல்லது தொடர்பற்ற விதத்திலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எழும் உரிமைக் கோரிக்கைகள், கோரிக்கைகள் அல்லது இழப்புக்களிலிருந்து எல்.ஓ.எப்.ஸீ, அதன் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள் விடுவிக்கப்படுவார்கள். சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட முழுமையானளவிற்கு நேரடியான அல்லது மறைமுகமான இழப்புக்களின்/ சேதங்களின் எவ்வகையான சூழ்நிலைகளிலும் எல்.ஓ.எப்.ஸீ எனக்கு/ எமக்கு அல்லது மூன்றாம் திறத்தவருக்கு எச்சந்தர்ப்பத்திலும் பொறுப்புக்கூறாது அல்லது பொறுப்புடைமையாக இருக்காது. எல்.ஓ.எப்.ஸீ யின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலைமைகளால் ஏற்படும் ஏதாவது குறைபாட்டுக்கு/ தாமதத்துக்கு எல்.ஓ.எப்.ஸீ க்கு பொறுப்புடைமையேதுமில்லை.

2. நான்/ நாம் பதினெட்டு (18) வயதுக்கு மேற்பட்டவர்களென்பதுடன் பதிவுகளின் போது வழங்கப்பட்ட விபரங்கள் சரியானவையும் பூர்த்தியானவையுமாகும். நான்/ நாம் சுயவிபரங்களை இற்றைப்படுத்துவதனூடாக ஏதேனும் மாற்றங்களை எல்.ஓ.எப்.ஸீ க்கு அறிவிப்பதாக உத்தரவாதமளிக்கின்றேன்/ உத்தரவாதமளிக்கிறோம்.

3. சேவைகளின் பாவனையானது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது உரிய அதிகார சபைகளால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதுடன், மேலும், இத்தகைய சேவைகள் மற்றும்/ அல்லது வசதிகள் மற்றும்/ அல்லது கொடுக்கல் வாங்கல்களை கட்டுப்படுத்துகின்ற எல்.ஓ.எப்.ஸீ இன் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும்/ அல்லது ஏதாவது குறிப்பீட்டு நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

4. கூட்டு கணக்கு வைத்திருப்பவர்கள் ஏனையவற்றுடன் கூட்டாகவும் தனிப்பட்ட ரீதியிலும் இத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் கட்டுப்பட்டவர்கள் என்றும், மேலும் கூட்டுக்கணக்காளர்களுள் ஒருவரால் அல்லது பலரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளனவா அல்லது வழங்கப்படவில்லையா என்பதனைக் கருத்திற்கொள்ளாது இச்சேவைகளை பயன்படுத்தி மேற்கொள்ளும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் அவர்கள் கூட்டாகவும் தனிப்பிட்ட ரீதியிலும் பொறுப்புடைமை உடையவர்களென்றும், மேலும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகள் என்னையும்/ எமது பின்னுரித்தாளர்கள், வாரிசுகள், நிறைவேற்றுநர்கள், நிர்வாகிகள் அல்லது பொருந்தும் விதத்திலான அனுமதிக்கப்பட்ட சாத்துதல்காரர்களையும் கட்டுப்படுத்துமெனவும் நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

5. எனக்கு/ எமக்கு ஏதேனும் முன்னறிவித்தல் இல்லாது அல்லது ஏதேனும் காரணங்களை கூறாது சேவைகளை இரத்துச் செய்யவோ, வாபஸ் பெறவோ அல்லது நிறுத்தவோ எல்.ஓ.எப்.ஸீ க்கு முழுமையான அதிகாரம் உண்டு.
6. எனக்கு/ எமக்கு வழங்கப்பட்ட அனைத்து தகவல்களின் இரகசியத் தன்மையை உத்தரவாதப்படுத்துவதற்கும், மேலும் மூன்றாம் திறத்தவரால் பெற்றுக்கொண்ட, வாசித்த அல்லது பார்த்த இத்தகவல்களால் எழும் ஏதேனும் விடயத்துக்கு எல்.ஓ.எப்.ஸீ பொறுப்புக்கூறாதென்றும் நான்/ நாங்கள் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

7. நான்/ நாம் ஏதாவதொரு சேவையை அல்லது அனைத்து சேவைகளையும் முடிவுறுத்துவதற்கு விரும்பினால் நான்/ நாம் எல்.ஓ.எப்.ஸீ க்கு அதனை வேண்டி எழுத்துமூலம் அறிவுறுத்தல்களை வழங்குவேன்/ வழங்குவோம்.

8. வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணத்தை அறவிடவும், கட்டணங்களை மாற்றவும்/ திருத்தவும், தற்றுணிவுடன் ஏனைய கட்டணங்களை அறவிடவும் எல்.ஓ.எப்.ஸீ க்கு சுதந்திரமுள்ளதுடன், என்னால்/ எம்மால் பரிந்துரைக்கப்பட்ட அல்லது எல்.ஓ.எப்.ஸீ இன் ஏதாவதொரு கிளையில் வைத்திருக்கின்ற எனது/ எமது ஏதாவதொரு கணக்கு/களிலிருந்து பற்று வைத்துக்கொள்ளும்.

9. எல்.ஓ.எப்.ஸீ என்னுடன்/ எம்முடன் இலத்திரனியல் தொடர்பாடல்கள் முறைகளினூடாக சேவை/சேவைகளை பற்றி தொடர்பாடலை மேற்கொள்ளும். நான்/ நாம் எல்.ஓ.எப்.ஸீ க்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் தொடர்பாடல் முறைகளினூடாக (மின்னஞ்சல்/ குறுஞ்சேவை) எல்.ஓ.எப்.ஸீ தொடர்பாடலை அனுப்பி அதனை நான்/ நாம் பெற்றுக்கொண்டதும் குறித்த இலத்திரனியல் தொடர்பாடல் கிடைக்கப்பெற்றதாக கருதப்படும்.

10. எல்.ஓ.எப்.ஸீ இன் முழுமையான தற்றுணிபில் இத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுள் ஏதாவதொன்றினை எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு/ எமக்கு அறிவித்துவிட்டு திருத்தவும், பிற்சேர்க்கவும் மாற்றுவதற்கும் எல்.ஓ.எப்.ஸீ க்கு உரித்துள்ளதுடன் அத்தகைய திருத்தங்கள், பிற்சேர்க்கைகள் அல்லது மாற்றங்கள் என்/ எம் மீதான பிணைப்பாக இருக்கும்.

11. என்னால்/ எம்மால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான எல்.ஓ.எப்.ஸீ இன் பதிவுகள் மற்றும் கூற்றுக்கள் இறுதியானவையெனவும், அனைத்து நோக்கங்களுக்காக என்/ எம் மீது பிணைப்பேற்படுத்தும் என நான்/ நாம் ஏற்றுக்கொள்வதுடன், மேலும் இங்கு குறிப்பிடப்பட்ட சேவைகளினூடாக என்னால்/ எம்மால் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது மீளப்பெறுதல்/ கைமாற்றல் முறைக்கொடுப்பனவு தொகையை எனது/ எமது கணக்கிலிருந்து வரவு வைத்துக்கொள்வதற்கு எல்.ஓ.எப்.ஸீ க்கு அதிகாரமளிக்கிறேன்.

12. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அல்லது அவை தொடர்பாக ஏதேனும் கருத்து வேறுபாடு எழும் பட்சத்தில் இலங்கையின் சட்டங்களுக்கேற்ப கட்டமைக்கப்படுவதுடன் பிணக்குகளை தீர்ப்பதற்கான பிரத்தியேக நியாயாதிக்கம் இலங்கையிலுள்ள நீதிமன்றங்களுக்கு இருக்கின்றன.

## ஆ) தானியங்கி டெலர் இயந்திர/ பற்று அட்டை

1. எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டையானது எந்நேரமும் எல்.ஓ.எல்.ஸீ பினான்ஸ் பீ.எல்.ஸீ இன் ஆதனமாக தொடர்ந்திருப்பதுடன், எல்.ஓ.எப்.ஸீ இன் வேண்டுகோளை தொடர்ந்து நிபந்தனையின்றி உடனடியாக எல்.ஓ.எப்.ஸீ க்கு ஒப்படைத்துவிட வேண்டும்.

2. நான்/ நாம் எனது/ எமது தனிப்பட்ட அடையாள எண்ணை/எண்களை (PIN) கண்டிப்பான இரகசித்தன்மையுடன் வைத்துக்கொள்வேன்/ வைத்துக்கொள்வாமென்றும், எத்தகைய சூழ்நிலையிலும் எவருக்கும் அத்தகைய எண்ணை/ எண்களை வெளிப்படுத்தவோ/ பகிரவோ மாட்டேன்/மாட்டோமெனவும் உத்தரவாதமளிக்கின்றேன்/ உத்தரவாதமளிக்கின்றோம். ‘‘எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டை தனிப்பட்ட அடையாள எண்’’ என்பது எல்.ஓ.எப்.ஸீ இனால் எனக்காக/ எமக்காக இரகசியமாக உருவாக்கப்பட்ட அசல் தனிப்பட்ட அடையாள

எண்ணாகவும் என்னால்/ எம்மால் செயலுருவாக்கப்பட்ட ஏதாவதுதொரு மாற்றீடாகவும் இருக்கும்.

3. என்னால்/ எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டை/அட்டைகள் திருடப்பட்டால்/ தொலைந்தால் நான்/நாம் உடனடியாக கொமர்ஷல் வங்கி/ ஹற்றன் நஷனல் வங்கி/ எல்.ஓ.எப்.ஸீ க்கு அறிவிப்பதுடன், தொலைந்த, திருடப்பட்ட அல்லது எனது/ எமது அதிகாரமில்லாது பயன்படுத்தப்பட்ட எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டையின்/ அட்டைகளின் பயன்பாட்டினால் ஏற்பட்ட ஏதாவது இழப்புக்கு நான்/நாம் எல்.ஓ.எப்.ஸீ யினை பொறுப்புரிமைக்கு உட்படுத்தமாட்டேன்/ உட்படுத்தமாட்டோம்.

4. எல்.ஓ.எப்.ஸீ இன் வலையமைப்பு உள்ளடங்கலாக ஏதாவது உள்நாட்டு வலையமைப்புக்களினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கட்டணங்கள், மற்றும் எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டை/ அட்டைகளுடன் தொடர்புடைய ஏதாவது சட்ட கட்டணங்கள் அல்லது ஏனைய நியதிச்சட்ட உள்ளடங்கலாக வேறேதாவது பொறுப்புடைமைகள் இருந்தால் அவற்றை எனது/ எமது கணக்கிலிருந்து வரவு வைத்துக்கொள்வதற்கான அதிகாரத்தினை எல்.ஓ.எப்.ஸீ க்கு நான்/ நாம் வழங்குகிறேன்/ வழங்குகிறோம்.

5. எனக்கு/ எமக்கு ஏதேனும் முன்னறிவித்தல் இல்லாது அல்லது ஏதேனும் காரணங்களை கூறாது எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டையை இரத்துச்செய்யவோ, வாபஸ் பெறவோ அல்லது புதுப்பிக்கவோ எல்.ஓ.எப்.ஸீ க்கு முழுமையான தற்றுணிபு உண்டு. அத்துடன், நான்/நாம் எல்.ஓ.எப்.ஸீ யின் பற்று அட்டையின் பாவனையை நிறுத்துவதற்கு தீர்மானிக்கும் பட்சத்தில் நான்/நாம் 7 நாட்களுக்கு குறையாது எழுத்து மூல அறிவித்தலுடன் எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டையை திருப்பி ஒப்படைத்து விடுவேன்/வோம்.

6. எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டையின் அனைத்து மாற்றீடுகளும் புதுப்பித்தல்களும் அமுலிலுள்ள நிதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டனவாகும்.

7. ஏதேனும் ஒரு காரணத்துக்காக அட்டை ஏற்றுக் கொள்ளப்படாமைக்கு எல்.ஓ.எப்.ஸீ/ கொமர்ஷல் வங்கி/ ஹற்றன் நஷனல் வங்கி பொறுப்பாக மாட்டாது என்பதுடன், அட்டையின் பாவனை எனது/ எமது தனித்த ஆபத்தில் இருக்குமெனவும், மேலும், நான்/ நாங்கள் தற்செயலான அல்லது அட்டையின் பாவனையினால் எழும் ஏதாவது மற்றும் எல்லா ஆபத்துக்களையும் அனுமானித்திருக்கிறேன்/ அனுமானித்துள்ளோம்.

8. வெளிநாட்டில் நிலையான சொத்துக்கள், நிதிச் சொத்துக்கள் அல்லது வர்த்தக அளவுகளில் பொருட்களை வாங்குவதற்கும் இலங்கைக்கு வெளியே மூலதனத்தை பரிமாற்றம் செய்வதற்கும் எல்.ஓ.எப்.ஸீ பற்று அட்டையை/ அட்டைகளை பயன்படுத்தாதிருக்க நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம். இலங்கை ரூபாய் தவிர்த்து ஏனைய நாணங்களை இலங்கை ரூபாய்க்கு மாற்றியதன் பின்னர் அட்டையின் கணக்குக்கு வரவு வைக்கும் போது செல்லுபடியாகும் அனைத்து கட்டணங்களுக்கும், மேலும் எனக்கு/ எமக்கு வழங்கப்பட்டுள்ள அட்டையிலிருந்து/ அட்டைகளிலிருந்து எழும் அத்தகைய செலவுகள்/ கட்டணங்களுக்கு நான்/ நாம பொறுப்புடைமையுடன் இருக்க உடன்படுவதுடன், ஏதாவது இழப்புக்கள் நிகழ்ந்தால் அவற்றிலிருந்து எல்.ஓ.எப்.ஸீ யினை நட்டோத்தரவாதமளிக்கிறேன்/ அளிக்கிறோம்.

## இ) குறுந்தகவல் சேவை தகவல்கள்/ மின்னஞ்சல் தகவல்கள்/ டயலொக் டொப்அப்

1. எல்.ஓ.எப்.ஸீ மேற்கூறப்பட்ட தகவல்களை அனுப்பும் போது அவை என்னால்/ எம்மால் பெற்றுக்கொள்ளபட்டனவாக கருதப்படும்.

2. இச்சேவைகளின் ஏதாவது கோளாறு அல்லது செயலிழப்பினாலான எவ்விதத்திலான இழப்பு அல்லது சேதம் தொடர்பாக எல்.ஓ.எப்.ஸீக்கு பொறுப்போ அல்லது பொறுப்புடைமையோ அல்லது வகைகூறலோ இருக்கமாட்டாது.

3. இத்தகைய சேவைகளை வழங்குவதற்கு எல்.ஓ.எப்.ஸீ யினால் காலத்துக்குக் காலம் கோரும் தகவல்களை நான்/ நாம் வழங்குகிறேன்/ வழங்குகிறாம். என்னால்/ எம்மால் எல்.ஓ.எப்.ஸீ க்கு

ஏலவே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலேயே எல்.ஓ.எப்.ஸீ செயற்படுமென நான்/ நாம் விளங்கிகொண்டுள்ளதுடன், எனது/ எமது பகுதி தொடர்பான திரித்துரைத்தல்களுக்கு எல்.ஓ.எப்.ஸீ பொறுப்பில்லை.

4. நான்/ நாம் கையடக்க தொலைபேசி இலக்கத்தினை/ மின்னஞ்சலை மாற்றும் சந்தர்ப்பத்தில் உடனடியாக எல்.ஓ.எப்.ஸீ க்கு அறிவிப்பதுடன், நான்/ நாம் அவ்வாறு அறிவிக்க தவறும் பட்சத்தில் எல்.ஓ.எப்.ஸீ யினை பொறுப்புடைமைக்கு உட்படுத்தப்படமாட்டது என உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

5. எனது/ எமது கையடக்க தொலைபேசியை தொலைந்த சந்தர்ப்பத்திலோ அல்லது மூன்றாம் திறத்தவரின் சந்தேகிக்கத்திற்குரிய நடவடிக்கை தொடர்பாகவோ நான்/ நாம் எல்.ஓ.எப்.ஸீ க்கு அறிவிக்க உடன்படுவதுடன், தேவையென கருதும்பட்சத்தில் எல்.ஓ.எப்.ஸீ மேற்குறிப்பிட்ட சேவையை நிறுத்திவிடும் அல்லது செயலிழக்க செய்துவிடுமெனவும் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம். மேலும், நான்/ நாம் அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில் எல்.ஓ.எப்.ஸீ பொறுப்புகூறாதென நான்/ நாம் உடன்படுகிறேன்/றோம்.

6. இலத்திரனியல் பரிமாற்றங்களின் உள்ளார்ந்த இயல்பின் காரணமாக சேமிப்பு கணக்கினூடான தரவு பரிமாற்றம் தொடர்பாக குறுந்தகவல்/ மின்னஞ்சல் மற்றும் டயலொக் டொப்அப் சேவைகள் தவறுகளற்றவையென உத்தரவாதமளிக்க முடியாதென நான்/ நாம் விளங்கி ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம். மேலும், இச்சேவைகள் கிடைக்கும் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன என்றும், எவையாயினும் வேறுகாரணங்களுக்காகவோ அல்லது சேவைகளை பயன்படுத்துகையில் நிகழக்கூடிய இணைய கோளாறுகள், தரவு இழப்பு, தரவு பரிமாற்றல் தவறுகள் அல்லது மோசடியின் காரணத்தினால் அல்லது எவையாயினும் வேறுகாரணங்களால் ஏதாவதொரு நேரத்திலோ அல்லது காலத்துக்குக் காலம் நிகழும் குறுக்கீடுகள் அல்லது சேவைகளின் கிடைப்பனவின்மை போன்ற காரணங்கள் உள்ளடங்கலாக சேவையினை பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய அல்லது அனுபவிக்ககூடிய அசௌகரியம், சேதங்கள் அல்லது இழப்புகளுக்கு எல்.ஓ.எப்.ஸீ பொறுப்புடைமையோ பொறுப்போ இல்லையென விளங்கி அதனை ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம்.

7. பதிவு செய்யப்பட்ட கையடக்க தொலைபேசியின் ஏதாவது தொழிநுட்ப அல்லது வேறு கோளாறின் காரணமாக மற்றும் அல்லது இச்சேவையை பயன்படுத்துவதிலிருந்து தானாகவே செயலிழக்கச் செய்யும் எவையாயினும் காரணத்துக்காக கையடக்கத் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் முகவரி துண்டிக்கப்படுவதன் காரணமாக இச்சேவைகள் கிடைக்கப்பெறாமைக்கு எல்.ஓ.எப்.ஸீ பொறுப்பாகமாட்டாது என நான்/ நாம் ஏற்று உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

### ஈ) எல்.ஓ.எல்.ஸீ ரியல்டய்ம்/ எல்.ஓ.எல்.ஸீ ரியல்டய்ம் செயலி

1. இவ்வசதி எல்.ஓ.எப்.ஸீ வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றதென்றும், இச்சேவைக்கு முதலாவது விண்ணப்பதாரி மாத்திரம் தகுதியுடையவரென்றும், 2ஆம் அல்லது 3ஆம் விண்ணப்பதாரிகள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட கணக்குகள் இச்சேவைக்கு தகுதியில்லையென்றும், நான்/ நாம் விளங்கிகொண்டுள்ளதுடன், முதலாவது விண்ணப்பதாரிக்கு மட்டும் இச்சேவையை வழங்குவதற்கு நான்/ நாம் அதிகாரமளிக்கிறேன்/ அதிகாரமளிக்கிறோம்.

2. முதலாவது விண்ணப்பதாரியிடமிருந்து எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியினூடாக எல்.ஓ.எப்.ஸீ இனால் பெற்றுக்கொள்கின்ற அறிவுறுத்தல்கள் அல்லது தகவல்களை ஏற்று அவற்றின் படி செயற்படுவதற்கு நான்/ நாம் எனது/ எமது அதிகாரத்தினை வழங்குவதுடன், பயனர் ஆவணப்படுத்தலில் விபரித்தவாறும் எனக்கு/ எமக்கு வழங்கப்பட்ட கடவுச்சொல் அல்லது 1வது விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட பயோமெட்ரிக் வழியிலும் குறித்த அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. (கடவுச்சொல் என்பது எல்.ஓ.எப்.ஸீ இனால் இரகசியத்தன்மையுடன் உருவாக்கப்பட்ட கடவுச்சொற்கள் என்பதுடன், மற்றும்/ அல்லது எல்.ஓ.எப்.சீ யினால் உருவாக்கப்பட்டு எனக்கு/ எமக்கு வழங்கப்பட்ட அடுத்தடுத்த கடவுச்சொற்கள், மேலும், பயோமெட்ரிக் என்பது உங்களது கையடக்க சாதனத்தில் சேமித்த உயிர் அடையாளக் குறியீடகளாகும்)

3. எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் இனை பயன்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற பயனர் அடையாள எண்/ கடவுச்சொல்/சொற்களை எவருக்கும் எந்நேரத்திலும் எத்தகைய சூழ்நிலையிலும் நான்/ நாம் வெளிப்படுத்தமாட்டேன்/ வெளிப்படுத்தமாட்டோம் என்பதுடன் அது தொடர்பாக கண்டிப்பான இரகசியத்தன்மை பேணப்படும்.

4. பயனர் அடையாள எண்/ கடவுச்சொல்/சொற்கள் அதிகாரமற்ற ஒருவருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக நான் அறிந்துகொண்டவுடனே அல்லது கையடக்க சாதனம் திருடப்பட்டவுடன் எல்.ஓ.எப்.ஸீக்கு கூடிய விரைவில் நான்/ நாம் அறிக்கையிடுவேன்/ அறிகையிடுவோம்.

5. அறிவுறுத்தல்கள் என்னிலிருந்து/எம்மிலிருந்து வராதவை என எல்.ஓ.எப்.ஸீ அதன் தனித்த தற்றுணிவில் நம்புமெனின் என்னால்/ எம்மால் வழங்கப்பட்ட அத்தகைய அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்கு எல்.ஓ.எப்.ஸீ கட்டுப்படமாட்டாது என நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

6. எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியினூடாக அறிவுறுத்தல்கள் தொடர்பாக மேலதிக குறிப்பீடுகளை வேண்டிநிற்கும் கடப்பாட்டில் எல்.ஓ.எப்.ஸீ இல்லை என்றும், மேலும் அவ்வாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மீட்டுப்பெறமுடியாதவை என்றும் அவை என்னை/ எம்மை கட்டுப்படுத்துமென்றும் நான்/ நாம் உடன்பட்டு ஒப்புக்கொள்கிறேன்/ ஒப்புக்கொள்கிறோம்.

7. எனது/ எமது கணக்கில்/ கணக்குகளில் போதியளவு நிதி இல்லாவிட்டால் எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியினூடாக நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்துவதற்கு நான்/ நாம் எச்சந்தர்ப்பத்திலும் முயற்சிக்கமாட்டேன்/ முயற்சிக்கமாட்டோம் என நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம். உரிய தினத்தில்/ தினங்களில் கணக்கில்/ கணக்குகளில் போதியளவு நிதி இருந்தால் மாத்திரமே எதிர்கால திகதியில் நிறைவேற்ற திட்டமிட்ட கொடுக்கல் வாங்கல்கள் எல்.ஓ.எப்.ஸீ யினால் நிறைவேற்றப்படுமென்றும் நான்/ நாம் உடன்படுவதுடன், மேலும் கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் மற்றும்/ அல்லது அத்தகைய கொடுப்பனவு வழங்கப்பட வேண்டிய நேரத்தில் குறிப்பிட்ட கணக்கில்/ கணக்குகளில் போதியளவு நிதிகள் இல்லாவிட்டால் கொடுப்பனவு அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கடப்பாடு எல்.ஓ.எப்.ஸீ க்கு இல்லையென நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

8. எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதி தவறுகளற்றதென எல்.ஓ.எப்.ஸீ உத்தரவாதமளிப்பதில்லை என்றும் சகல சந்தர்ப்பங்களிலும் எனது/ எனது தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன என்றும் நான்/ நாங்கள் விளங்கியுள்ளேன்/ விளங்கியுள்ளோம்.

9. எல்.ஓ.எப்.சீ, எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியை தற்காலிகமாக கட்டுப்படுத்துமென்றும், அல்லது திருத்தங்கள், பராமரிப்பு அல்லது புது அம்சங்களை அறிமுகப்படுத்துவதற்கு அதனை முழுமையாக செயலிழப்புக்கு உட்படுத்துமென்றும், மேலும் அவ்வாறே இரண்டு மாத முன்னறிவித்தலை வழங்குவதன் மூலம் நிகழ்நிலை கணக்கினை மூடும் உரிமை எல்.ஓ.எப்.சீ இற்கு இருக்கிறதென நான்/ நாம் விளங்கி கொண்டுள்ளேன்/ விளங்கி கொண்டுள்ளோம்.

10. என்னால்/ எம்மால் வேண்டிக்கொள்ளப்பட்ட ஏதாவது அறிவுறுத்தலை செயல்முறைப்படுத்துவதற்கு எல்.ஓ.எப்.ஸீ நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளுமென்றும் அத்தகைய நியாயமான முயற்சிகளை மேற்கொள்வதற்கு எல்.ஓ.எப்.சீ யின் ஏதேனுமொரு கோளாறு காரணமாக இல்லாவிட்டால் அத்தகைய வேண்டுகோளுக்கு (வேண்டுகோள்களுக்கு) இணங்க தவறியமைக்கு எல்.ஓ.எப்.ஸீ பொறுப்பில்லையென நான்/ நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம்.

11. கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்களின் உண்மைத்தன்மை மற்றும் பூரணத்துவம் தொடர்பாகவும் நான்/ நாம் பொறுப்புடையவன்/ பொறுப்புடையவர்கள் என்பதுடன், எந்தவொரு சேதத்திலிருந்தும் எல்.ஓ.எப்.ஸீ நிறுவனத்துக்கு பாதிப்பில்லாதவாறு அதனை பாதுகாப்பேன்.

12. நிறைவேற்றப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் எல்லா வேளைகளிலும் வழங்கப்பட்ட அறிவித்தல் மாதிரியே இருக்காதென நான்/நாம் புரிந்துகொண்டுள்ளேன்/ புரிந்துகொண்டுள்ளோம். ஒரு சில அறிவுறுத்தல்கள் ஒரு தாமதத்தின் பின்னர் நடைமுறைப்படுத்தப்படலாமென்பதுடன், மேலும்/ அல்லது வேலைநேரங்களுக்கு அப்பால் சேவையை அணுகக்கூடியதாக இருந்தாலும் ஒரு சில அறிவுறுத்தல்கள் வேலை நேரங்களில் மாத்திரம் செயற்படுத்தப்படலாமென்பதுடன் எந்தவொரு சேதத்திலிருந்தும் எல்.ஓ.எப்.ஸீ க்கு பாதிப்பில்லாதவாறு அதனை பாதுகாப்பேன்.

13. எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியின் கோளாறு அல்லது செயலிழப்பின் காரணமாகவோ அல்லது இந்த சாதனத்தினூடாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுவதற்கான எல்.ஓ.எப்.ஸீ யின் செயலிழப்பு அல்லது தாமதத்தின் காரணமாகவோ நிகழும் எவையாயினும் இழப்புக்கள் அல்லது சேதங்களுக்கு எவ்விதத்திலும் எல்.ஓ.எப்.சீ க்கு பொறுப்புடைமையோ, பொறுப்போ அல்லது வகைகூறலோ ஏற்றுக் கொள்ளமாட்டாது என நான் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

14. இதனகத்துள்ள ஏற்பாடுகளின் பொதுத்தன்மையாக இருந்தபோதிலும் மேலும் அதற்கு பங்கமின்றி இருந்தாலும் எல்.ஓ.எல்.ஸீ யின் ரியல் டய்ம் வசதியின் பாவனையானது எனது/ எமது சுய இடருக்குட்பட்டதென நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம் என்பதுடன், எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியின் பாவனையில் தற்செயலாக நிகழ்கின்ற அல்லது பாவனையினால் எழும் ஏதாவது மற்றும் எல்லா ஆபத்துக்களையும் நான்/ நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம்.

15. சேமிப்புக்கள், நிலையான வைப்புக்கள், குத்தகை, காப்புறுதி, கடன் மற்றும் அல்லது ஏனைய கணக்குகள்/ வசதிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அத்தகைய கணக்குகளுடன் தொடர்புடைய எல்.ஓ.எல்.ஸீ யின் ரியல் டய்ம் கொடுக்கல் வாங்கல்களுக்கு செல்லுபடியாகுமென நான்/ நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம்.

16. எல்.ஓ.எல்.ஸீ யின் ரியல் டய்ம் வசதியைப் பயன்படுத்தும் போது பதிவு செய்த ஏதாவது தகவல்கள் எனது/ எமது முன் அங்கீகாரத்துடன் மாத்திரமே சேமிக்கப்படுமென நான்/ நாம் இத்தால் ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம். எல்.ஓ.எப்.ஸீ பொருத்தமான தரவு திரட்டுதல், சேமித்தல் மற்றும் செயலாக்கல் நடைமுறைகளை இணைத்துக்கொண்டுள்ளதுடன், அதிகாரமற்ற அணுகல், மாற்றம், வெளிப்படுத்தல் அல்லது அழிவு என்பவற்றிலிருந்து இத்தகைய தகவல்களை பாதுகாப்பதற்கு நியாயமான போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அமுல்படுத்துகின்றது.

17. பயனாளிகள் எல்.ஓ.எல்.ஸீ இன் ரியல் டய்ம் வசதியினை பயன்படுத்தும் போதெல்லாம் எல்.ஓ.எப்.ஸீ க்கு தனிப்பட்டவல்லாத இனங்காணல் தகவல்களை முன் அனுமதியில்லாது திரட்ட முடியுமென நான்/ நாம் அறிந்துள்ளேன்/ அறிந்துள்ளோம். தனிப்பட்டவல்லாத தகவல்களில் உள்ளடங்கும் விடயங்கள் இணைய உலாவி பெயர், கணினி வகை மற்றும் தொழிநுட்ப தகவல்கள், இயக்க முறைமை, பயன்படுத்தப்படுகின்ற இணைய சேவை வழங்குநர் மற்றும் ஏனைய அவ்வாறான தகவல்கள் என்பனவாகும்.

18. எல்.ஓ.எப்.ஸீ பாதுகாப்பு நோக்கங்களுக்காக எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியின் பாவனையை கண்காணிக்குமென நான்/ நாம் அறிந்துள்ளேன்/அறிந்துள்ளோமென்பதுடன், எல்.ஓ.எப்.ஸீ அவ்வாறு சேமிக்கப்பட்டுள்ள ஏதாவது தகவல்களை கொடுக்கல் வாங்கல்களை செயன்முறைப்படுத்துதல், கணக்குகளை கட்டுப்படுத்துதல் (தரவுகளை பாதுகாப்பதற்காக தனிப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துதல் உள்ளடங்கலாக) மற்றும் முறைப்பாடுகளுக்கு துலங்குதல் என்பவற்றுடன் வரையறுத்துக்கொள்ளாது பல்வேறு நோக்கங்களுக்கு பயன்டுத்தலாமெனவும் நான்/ நாம் அறிந்துள்ளேன்/ அறிந்துள்ளோம்.

19. எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியை பயன்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற சிறப்பாக தொழிற்படுகின்ற, மேலும் பிழைகள், தீயநோக்கிலான அச்சுறுத்தல்கள், வைரஸ் தாக்குதல்கள் போன்றவற்றிலிருந்து போதிய பாதுகாப்புடன்கூடிய ஏதாவது உபகரணத்தினை பெற்று பராமரிப்பது எனது/ எமது பொறுப்பென நான்/ நாம் அறிந்துள்ளேன்/ அறிந்துள்ளோம்.

20. எனது/ எமது எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியின் பாவனையின் அடிப்படையில் எல்.ஓ.எப்.ஸீ சந்தை மற்றும் ஏனைய பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுமென நான்/ நாம் அறிந்துள்ளேன்/ அறிந்துள்ளோம். வசதியை மேம்படுத்துவதற்காக பயனர் முறை மற்றும் நடத்தையை இனங்காண்பதற்கே அத்தகைய பகுப்பாய்வுகள் நடத்தப்படுகின்றன.

21. எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதிகள் சட்ட விரோதமெனவும், சட்டரீதியற்றதெனவும் தடைசெயப்பட்டதெனவும் கருதப்படுகின்ற பிரதேசங்களில் அவ்வசதியின் பாவனைக்கு எல்.ஓ.எப்.ஸீ பொறுப்புடைமையாகாது என நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம். நான்/ நாம் இலங்கைக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் வசதியை பயன்படுத்துவதற்கு தெரிவுசெய்தால் மேலும் எனது சொந்த விருப்பத்தில் அவ்வாறு செய்தால் உள்நாட்டு சட்டங்களுடன் இணங்கியொழுகுவது எனது/ எமது பொறுப்பாகும்.

22. எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்மினூடாக கணக்கினை திறத்தல்

1வது விண்ணப்பதாரிக்கு எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்மினூடாக நிகழ்நிலை கணக்குகளின்/ நிலையான வைப்புக்களின் ஏதாவதொரு இலக்கத்தினை திறக்க முடியுமென்பதுடன் எல்.ஓ.எப்.ஸீ அனைத்து நிகழ்நிலை கணக்குகளை திறப்பதற்கு 1வது விண்ணப்பதாரியின் இருக்கின்ற (உங்கள் வாடிக்கையாளர்களை அறிந்து கொள்ளுங்கள் (KYC), பணிப்பாணைகள் மற்றும் ஏனைய உரிய ஆவணங்கள் மற்றும் தகவல்களுக்குரிய விபரங்கள் மற்றும் ஆவணங்கள்) விபரங்கள் மற்றும் ஆவணங்களை பயன்படுத்துவதுடன், வழங்கப்பட்ட விபரங்கள் இன்றுவரை உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான்/ நாம் உடன்படுவதுடன், அத்தகைய ஆவணங்கள் அல்லது விபங்களில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டால் 24 மணித்தியாலதிற்குள் எல்.ஓ.எப்.ஸீ க்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை நான்/ நாம் மேற்கொள்வதுடன், குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அத்தகைய மாற்றங்களை நான்/ நாம் அறிவிக்க தவறியமைக்காக எல்.ஓ.எப்.ஸீ நிறுவனத்தை பொறுப்பு சாட்டமாட்டேன்/ பொறுப்பு சாட்டமாட்டோம்.

**23. கணக்கு கூற்றுக்கள்**

கணக்கு/ கணக்குகளுக்காக இலத்திரனியல் கூற்று (இ-கூற்று) தயாரிக்கப்படுமென்றும் இது இணைய கணக்கென்பதனால் தாள் கூற்றுக்கள் வழங்கப்படமாட்டாதென்றும் உரிய கட்டணங்களில் இ-கூற்றினை அச்சிட்டு எடுக்கவோ அல்லது தாள் கூற்றொன்றை கோரவோ முடியுமென நான்/ நாம் அறிந்துள்ளேன்/ அறிந்துள்ளோம்.

**24. கணக்கினை மூடுதல்/ வாபஸ்பெறுதல்**

(அ) 1வது விண்ணப்பதாரிக்கு ஆரம்ப கணக்கு/ கணக்குகள் தவிர்த்து இணைய கணக்கு/ கணக்குகளின் நிலையான வைப்பு/ வைப்புக்களின் ஏதாவதொரு இலக்கத்தை எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்மினூடாக மூடவோ அல்லது வாபஸ்பெறவோ முடியுமென்றிருந்தாலும் மூடுகின்ற/ இரத்து செய்கின்ற கணக்கில்/ நிலையான வைப்பில் ஏதேனும் மீதி இருந்தால் அதனை மாற்றுவதற்கு எல்.ஓ.எல்.ஸீ ரியல் டய்ம் விபரக் குறிப்பிலுள்ள ஒரு கணக்கினை 1வது விண்ணப்பதாரி குறிப்பிட வேண்டும்.

(ஆ) இத்தகைய சந்தர்ப்பத்தில், நான்/ நாம் இணைய கணக்கிலிருந்து ஆக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் தானாகவே முடிவுறுத்தப்படுவதுடன், இணைய கணக்கு சார்பாக ஆக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் கணக்கினை மூடும் வரையில் இரத்தாகமாட்டாது.

25. எல்.ஓ.எப்.ஸீ க்கு கீழுள்ள ஏதாவதொரு சூழ்நிலையில் உடனடியாக கணக்கினை இடைநிறுத்தும் உரிமை இருப்பதென்றும், அத்தகைய ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் எனக்கு/ எமக்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென நான்/ நாம் விளங்கிகொண்டுள்ளேன்/ விளங்கிகொண்டுள்ளோம்.

(அ) ஏதாவது நீதிமன்றத்தினால் நான்/ நாம் வங்குரோத்து நிலையை அடைந்ததாக பிரகடனப்படுத்தப்பட்டால்,

(ஆ) எனக்கு/ எமக்கு எதிராக பெற்றுக்கொள்ளும் ஆணை தொடர்பாக ஏதேனும் முறைப்பாடு இருந்தால்

(இ) கணக்கு/ கணக்குகளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்ற கட்டளை அனுப்பப்பட்டால்

(ஈ) எனது/ எம்மில் எவராவது ஒருவரின் மரணித்துவிட்டால்,

(உ) மேற்கொள்ளப்பட்ட ஏதாவது பிரதிநிதித்துவங்கள், உத்தரவாதங்கள் அல்லது கூற்றுக்களின் உண்மைநிலை உண்மையில்லை என தெரிய வந்தால்,

(ஊ) நான்/ நாம் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது நிபந்தனைகளை மீறிய நிலையிருந்தால்,

(எ) ஏதாவதொரு காரணத்தினால் இவ்வுடன்படிக்கை செயற்படுத்தப்பட முடியாததாக அல்லது வெறிதானதாக மாறினால், மற்றும்

(ஏ) ஏதாவது முக்கிய மாற்றம் நிகழ்ந்து அது எல்.ஓ.எப்.ஸீ யின் அக்கறைகளில் தீங்கேற்படுத்துமென எல்.ஓ.எப்.ஸீ கருதினால்.

## (உ) கம்பி பரிமாற்றல்கள், தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் ஊடான அறிவுறுத்தல்கள்

1. எழுத்து/ வாய்மொழிமூல தொடர்பாடல்கள் மூலமாக குறிப்பிட்ட கணக்கினை/ கணக்குகளை அல்லது பங்குகள், கையிருப்புக்கள், முறிகள் அல்லது வேறு வகையிலான பிணையங்களில் இருக்கின்ற கொடுக்கல் வாங்கல்களின் செயற்பாட்டினை கட்டுப்படுத்தி என்னால்/ எம்மால் வழங்கப்பட்ட அல்லது என்/ எம் சார்பாக செயற்படுவதற்கு உரிய பணிப்பாணை/ அறிவுறுத்தல்கள்/ உடன்படிக்கை மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட நபர்கள் மூலம் வழங்கப்பட்ட ஏதாவது அறிவுறுத்தல்களை ஏற்று அவற்றுக்கேற்ப செயற்படுவதற்கு நான்/ நாம் இத்தால் எல்.ஓ.எப்.ஸீ க்கு அதிகாரமளிப்பதுடன், மேலும், **(1)** எனது/ எமது ஏதாவதொரு கணக்கிலிருந்து/ கணக்குகளிலிருந்து எல்.ஓ.எப்.ஸீ நிறவனத்தில் அல்லது வேறேதாவது நிதி நிறுவனத்தில் எனது/ எமது பெயரில்/ பெயர்களில் பேணப்படுகின்ற அல்லது வேறொருவரின் பெயரில் பேணப்படுகின்ற கணக்கு/ கணக்குகளுக்கான கொடுப்பனவு அல்லது நிதி பரிமாற்றங்கள் அல்லது எனது/ எமது கணக்குகளுடன் தொடர்புடைய எந்த நேர வைப்புக்கள் அல்லது வைப்புக்களின் சான்றிதழ்களை (பொருந்தக்கூடிய வட்டி வீதம், நாணயமாற்று வீதம் மற்றும் காலம் தொடர்பாக என்னால்/ எம்மால் அல்லது அதிகாரம்பெற்ற நபர்களால் மேற்கொள்ளப்படும் உறுதிப்படுத்தல்) புதுப்பித்தல், மீளப்பெறுதல் அல்லது இரத்துச்செய்தல், அல்லது எனது/ எமது ஏதாவது கணக்கின்/ கணக்குகளின் (பொருந்தக்கூடிய வட்டி வீதம், நாணயமாற்று வீதம், உரிய தொகை மற்றும் காலம் தொடர்பாக என்னால்/ எம்மால் அல்லது அதிகாரம்பெற்ற நபர்களால் மேற்கொள்ளப்படும் உறுதிப்படுத்தல் உள்ளடங்கலாக) கீழ் எல்.ஓ.எப்.ஸீ க்கான கடன்களை சுழலுறுதல் (தொடர் சுழற்சி முறையில் கடனடைத்தல்) அல்லது மீள செலுத்துதல் (பகுதியளவில் அல்லது மொத்தமாக) உள்ளடங்கலாக தற்போது அல்லது இதற்கு பின்னர் எல்.ஓ.எப்.ஸீ நிறுவனத்துடன் (எனது/ எமது கணக்குகள்) என்னால்/ எம்மால் பேணப்படுகின்ற கணக்கு/ கணக்குகளுடன் தொடர்புடைய, **(2)** மேலும், பங்குகள், கையிருப்புக்கள், முறிகள் மற்றும் ஏனைய பிணையங்களுடன் தொடர்பான எவையாயினும் கொள்வனவு, விற்பனை மற்றும் வேறேதாவது பரிமாற்றல்கள் தொடர்பான அத்தகைய தொடர்பாடல்கள் காலத்துக்குக் காலம்:

(அ) கம்பி பரிமாற்றங்கள் (ஒரு குறிப்பிட்ட குறியீட்டிலிருந்து மற்றும் தொலைநகல் மூலம் எல்.ஓ.எப்.ஸீ பரிமாறப்பட்டவை) மற்றும்

(ஆ) தொலைபேசியினூடான வாய்மொழிமூல கலந்துரையாடல், மற்றும்

(இ) என்னால்/ எம்மால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபர்/ நபர்களால் ஒப்பமிடப்பட்ட தொலைநகல் பரிமாற்றம், மற்றும்

(ஈ) மின்னஞ்சல் பரிமாற்றம் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

2. என்னால்/ எம்மால் அல்லது பகுதி உ-2 (கூட்டு தொடர்பாடல்கள்) இற்கேற்ப அதிகாரமளிக்கப்பட்ட நபர்களால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாக கருதப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எல்.ஓ.எப்.ஸீ யினால் செயலுருப்படுத்தப்படுகின்ற ஏதாவது கொடுக்கல் வாங்கல் எனது/ எமது அதிகாரம், அறிவு அல்லது ஒப்புதலுடனோ அல்லது

அதிகாரம், அறிவு அல்லது ஒப்புதல் இன்றியோ நிறைவேற்றப்பட்டாலும் குறித்த கொடுக்கல் வாங்கலுடன் நான்/ நாம் பிணைக்கப்படுவதாக நான்/ நாம் உடன்படுவதுடன், நான்/ நாம் குறித்த கொடுக்கல் வாங்கலை எல்.ஓ.எப்.ஸீ இனால் வேண்டிக்கொள்ளப்படுகின்றவாறு குறித்த கால எல்லைக்குள் பூரணப்படுத்துகிறேன்/ பூரணப்படுத்துகிறோம்.

3. மேற்கூறப்பட்ட தொடர்பாடல்கள் மூலமாக வழங்கப்பட்ட ஏதாவதொரு கொடுக்கல் வாங்கலுக்கான அறிவுறுத்தல்கள் எனது/ எமது கணக்குக்கில் பதியப்படும் மேலும், எல்.ஓ.எப்.ஸீ முழுமையான தற்றுணிபுக்கேற்ப தெரிவுசெய்யும் அத்தகைய தரகர்கள் அல்லது முகவர்களுடனான இடருக்கும், மேலும், இத்தகைய தரகர்கள் அல்லது முகவர்களின் ஏதாவது செய்கை, தவிர்த்தல், உதாசீனம் அல்லது தவணை தவறுகைக்கு எல்.ஓ.எப்.ஸீ க்கு பொறுப்புடைமையோ வகைகூறலோ ஏற்றுக்கொள்ளமாட்டாது என நான்/ நாம் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

4. மேற்கூறப்பட்ட பொதுத்தன்மைக்கு பங்கமேற்படாத விதத்தில், நான்/ நாம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபர்களல்லாது வேறொருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தொடர்பாடலின் படி செயற்பட்டதனால், அல்லது எனது/ எமது ஒப்பம்/ ஒப்பங்களை போலியாக வைத்த தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்யப்பட்ட அறிவுறுத்தல்களின் படி அத்தகைய நபர்கள் எனக்காக/ எமக்காக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபர்/ நபர்களுக்காக தகவல் கொடுக்கின்றாரென்றும் அல்லது உரிய தொலைநகல் அறிவுறுத்தல்களிலுள்ள ஒப்பம்/ ஒப்பங்கள் உண்மையானவையன்றி போலியானவையல்ல என்ற நல்லெண்ணத்துடன் எல்.ஓ.எப்.ஸீ செயற்பட்டிருந்தால் அதன் காரணமாக ஏற்படும் இழப்புகளுக்கு எல்.ஓ.எப்.ஸீ பொறுப்புடைமையாகாது என நான்/ நாங்கள் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

5. எனது/ எமது தொடர்பாடல்களுக்கு இணைவாக, வரையறையின்றி கொடுக்கல் வாங்கல் செய்யப்பட வேண்டிய தொகை, ஏதாவது பிணைப்பத்திரங்கள், தரகு, முத்திரை தீர்வை மற்றும் தொடர்பாடல் மூலம் ஏற்படுத்தப்பட்ட ஏனைய கட்டணங்கள் உள்ளடங்கலாக பரிமாற்றல்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக தற்செயலாக ஏற்படுகின்ற அல்லது கோரப்படுகின்ற ரொக்கப்பணங்கள், கட்டணம், கட்டணங்கள், மற்றும் செலவுகளை வேண்டுகோளின் படி எல்.ஓ.எப்.ஸீ நிறுவனத்துக்கு செலுத்த நான்/ நாம் செலுத்துவேன்/ செலுத்துவோம். மேலும், அத்தகைய கொடுப்பனவுகளை எனது/ எமது கணக்கிலிருந்து/ கணக்குகளிலிருந்து அல்லது எல்.ஓ.எப்.ஸீ யிலுள்ள எனது/ எமது கணக்கிலிருந்து/ கணக்குகளிலிருந்து வரவு வைத்துக்கொள்வதன் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு எல்.ஓ.எப்.ஸீ க்கு இத்தால் மாற்ற முடியாதவாறு அதிகாரமளிக்கப்படுகின்றது.

6. எல்.ஓ.எப்.ஸீ இல் பதிவுசெய்த எனது/ எமது கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு தொடர்பாடல் செய்யப்படுகின்ற ஏதாவது கொடுக்கல் வாங்கல் ஆலோசனைகள் எனக்கு/ எமக்கு முறையாக கிடைக்கப்பெற்றதென கருதப்படும். கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதியிலிருந்து 7 நாற்காட்டி தினங்களுக்குள் என்னிடமிருந்து/ எம்மிடமிருந்து முரணறிக்கையொன்று எல்.ஓ.எப்.ஸீ க்கு கிடைக்கப்பெறாவிட்டால் குறித்த கொடுக்கல் வாங்கல் என்னால்/ எம்மால் உறுதிப்படுத்தப்பட்டு விட்டதாக கருத்திற்கொள்ளப்படும்.

7. எல்.ஓ.எப்.ஸீ அதன் தனித்த தற்துணிபுடன் எனது. எமது கணக்கின்/ கணக்குகளின் அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் தொடர்பாடலை ஆரம்பித்திருக்காவிட்டாலும் அவர்களுக்கு அழைப்பினை மேற்கொள்ளும்.